11.05.2016

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கர்நாடகத்தில் பறவைக் காய்ச்சல் நாமக்கல் பண்ணையாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

நாமக்கல் : கர்நாடக மாநிலத்தில் கோழிகளுக்கு பறவை காய்ச்சல் தாக்கியுள்ளதை தொடர்ந்து, நாமக்கல் பண்ணையாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். கர்நாடக மாநிலம், பிடார் மாவட்டம் மல்கிரா கிராமத்தில் கோழிகளை பறவைக்காய்ச்சல் தாக்கியுள்ளது. அதைத்தொடர்ந்து அந்த கிராமத்தை சுற்றியுள்ள 10 கிராமங்களில் வளர்க்கப்பட்டு வரும் சுமார் 1.50 லட்சம் கோழிகள் மற்றும் முட்டைகளை அழிக்க, அம்மாநில கால்நடைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து, நாமக்கல் பகுதியிலும் கோழிப்பண்ணையாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

கோழிப்பண்ணைக்குள் வெளியாட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பண்ணைகளை சுகாதாரமான முறையில் பராமரித்து வருகின்றனர். கர்நாடக மாநிலத்தில் இருந்து கோழித் தீவன மூலப்பொருட்களை வாங்குவதிலும், பண்ணையாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில், கர்நாடக மாநிலத்தில் கோழிகளை தாக்கியுள்ள பறவைக்காய்ச்சலால் நாமக்கல் பண்ணையாளர்கள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து நாமக்கல் மாவட்ட கால்நடைத்துறை அதிகாரிகள் கூறுகையில், கர்நாடக மாநிலக்கில் பறவைக்காய்ச்சல் கோழிகளை தாக்கியுள்ளது குறித்து உறுதியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. நாமக்கல் பகுதியில் உள்ள பண்ணைகள்

சுகாதாரமான முறையில் பராமரிக்கப்பட்டு வருவதால், நோய் தாக்குதல் இங்கு ஏற்பட வாய்ப்பில்லை என்றனர்.

## மஞ்சள் விலை குவின்டாலுக்கு ரூ.1400 வரை விலை வீழ்ச்சி

ஈரோடு, : ஈரோடு மஞ்சள் மார்க்கட்டில் பிப்ரவரி மாதத்தில் ஒரு குவின்டால் மஞ்சள் ரூ.10,300 முதல் 10,500 வரையிலும், மார்ச் மாதத்தில் ஒரு குவின்டால் மஞ்சள் ரூ.9800 முதல் 10 ஆயிரம் என்ற விலையிலும் ஏலம் போனது. கடந்த சில நாட்களாக மஞ்சள் விலை தொடர்ந்து சரிவடைந்து வந்த நிலையில் நேற்று அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில் ஒரு குவின்டால் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ.8637க்கும், குறைந்தபட்சமாக ரூ.7699க்கும், கிழங்கு அதிகபட்சமாக ரூ.8455க்கும், குறைந்தபட்சமாக ரூ.7599க்கும் விலை போனது. இதேபோல வெளி மார்க்ெகட்டில் ஒரு குவின்டால் விரலி அதிகபட்சமாக ரூ.9009க்கும், குறைந்தபட்மாக ரூ.8099க்கும், கிழங்கு அதிபட்சமாக ரூ.8529க்கும், குறைந்தபட்சமாக ரூ.7899க்கும் விலை போனது.

கடந்த மார்ச் மாதத்துடன் ஒப்பிடும் போது ஒரு குவின்டால் மஞ்சள் ரூ.1400 வரையிலும் விலை வீழ்ச்சியடைந்திருப்பது விவசாயிகளிடம் சோகத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது: தேர்தல் ஆணையத்தின் கெடுபிடி காரணமாக பணத்தை எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள பிரச்னையால் மஞ்சள் வாங்க வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து விட்டது. இதன் காரணமாக மஞ்சள் ஏலம் கோரும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைந்து விற்பனையும் மந்தமாக உள்ளது. தேர்தல் முடியும் வரை மஞ்சள் விற்பனையில் மந்தமான நிலையே காணப்படும். தேர்தலுக்கு பிறகு மஞ்சள் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஏனெனில் கடந்த ஆண்டு மகாராஷ்டிரா மாநிலம் சாங்கிலி, ஆந்திர மற்றும் தெலங்கானாவில் உள்ள நிஜமதாபாத், வாரங்கல் மஞ்சள் சந்தைகளில் மஞ்சள் வரத்து வெகுவாக குறைந்துள்ளது. ஈரோடு மஞ்சள் மார்க்ெகட்டில் தான் ஓரளவு மஞ்சள் வரத்து அதிகமாக காணப்படுகிறது.

எனவே தேர்தலுக்கு பிறகு மஞ்சள் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பருத்தியில் மாவுப்பூச்சி கட்டுப்படுத்தும் வழிமுறை அதிகாரிகள் விளக்கம்

நீடாமங்கலம் : நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ராஜாரமேஷ், பாஸ்கரன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பருத்தியில் மாவுப்பூச்சி தாக்குதலுக்கான காரணங்கள் வறண்ட வானிலை, அதிகமான வமிமண்டல வெப்ப நிலை. எறும்புகள் மாவு பூச்சிகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்வதற்கு வழிவகுக்கிறது. காற்று மனிதர்கள், பறவைகள் மூலமாகவும் நீர்பாசனம் செய்யும் போதும், பண்ணை கருவிகள் மற்றும் உபகரணங்கள், தாக்கப்பட்ட நடவுப்பொருள்கள் ஆகியவற்றை, வேறொரு இடத்திற்கு கொண்டு செல்வதாலும் எளிதாக பரவுகிறது.

இதனை கட்டுப்படுத்த வயலில் காணப்படும் களை, செடிகளை அழித்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மாவுப்பூச்சிகளை மெல்லிய மாவ போன்ற படலம் சூழ்ந்நிருப்பதால் ரசாயன பூச்சிக்கொள்ளிகளால் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமமானது. இப்பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த அசிரோபேஸ் பப்பாயே என்ற ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு 100 பூச்சிகள் என்ற எண்ணிக்கையில் வெளியிட வேண்டும். ஒட்டுண்ணிகளின் எண்ணிக்கையை பெருக்கும் மாவுப்பூச்சிகளின் தாக்குதல் தீவிரமாகாமல் தடுக்க, ரசாயன பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்துவதை தவிர்த்து விட வேண்டும்.

தாவர பூச்சிக்கொல்லிகளான வேப்பெண்ணை 2 சதம் அல்லது வேப்பங்கொட்டைக் கரைசல் 5 சதம் அல்லது மீன் எண்ணை சோப் ஒருலிட்டர் தண்ணீரில் 25 கிராம் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். டைமீத்தாயேட் 30 ஈசி அல்லது பிரபினோபாஸ் 50 ஈசி ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி என்ற அளவிலும் தெளித்துக்கட்டுப்படுத்தலாம்.

**அதிக மகசூல் பெற தென்னைக்கு உரமிடும் வழிமுறை விவசாயிகளுக்கு யோசனை**

சேதுபாவாசத்திரம் : அதிக மகசூல் பெற தென்னை மரங்களுக்கு இட வேண்டிய உர அளவு குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) சாந்தி வெளியிட்டுள்ளஅறிக்கை: தென்னைக்கு உரமிடுவதற்கு ஏதுவாக தற்போது கடைமடை பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

இதை பயன்படுத்தி நாட்டு ரக (நெட்டை ரகம்) தென்னைகளுக்கு நடவு செய்தது முதல் ஒரு வருட கன்றுக்கு தொழு உரம் 10 கிலோ, யூரியா 325 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 500 கிராம், வேப்பம்புண்ணாக்கு ஒன்றரை கிலோ இட வேண்டும். 2 வருட கன்றுக்கு தொழு உரம் 20 கிலோ, யூரியா 650 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா ஒரு கிலோ, வேப்பம்புண்ணாக்கு இரண்டரை கிலோவும், 3 வருட கன்றுக்கு தொழு உரம் 30 கிலோ, யூரியா 975 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா ஒன்றரை கிலோ, வேப்பம்புண்ணாக்கு மூன்றே முக்கால் கிலோ இட வேண்டும்.

4 வருட கன்றுக்கு தொழு உரம் 40 கிலோ, யூரியா ஒரு கிலோ 300 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 2 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ, 5 வருட கன்றுக்கு தொழு உரம் 50 கிலோ, யூரியா 1.300 கிலோ, சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 2 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோவும் இட வேண்டும். வீரிய ஒட்டு (நெட்டை இன்ட் குட்டை மற்றும் குட்டை இன்ட் நெட்டை) ரக தென்னைகளுக்கு ஒரு வருட கன்றுக்கு தொழு உரம் 15 கிலோ, யூரியா 500 கிராம், சூப்பர் 375 கிராம், பொட்டாஷ் 750 கிராம், வேப்பம்புண்ணாக்கு ஒன்றரை கிலோவும், 2 வருட கன்றுக்கு தொழு உரம் 30 கிலோ, யூரியா ஒரு கிலோ, சூப்பர் 750 கிராம், பொட்டாஷ் ஒன்றரை கிலோ, வேப்பம்புண்ணாக்கு இரண்டரை கிலோவும், 3 வருட கன்றுக்கு தொழு உரம் 45 கிலோ, யூரியா ஒன்றரை கிலோ, சூப்பர் 1.150 கிலோ, பொட்டாஷ் 2.250 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 3.750 கிலோவும், 4 வருடம் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மரம் ஒன்றுக்கு தொழு உரம் 60 கிலோ, யூரியா 2.250 கிலோ, சூப்பர் 1.500

கிலோ, பொட்டாஷ் 3 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ இட வேண்டும்.
மேற்கண்ட உர பரிந்துரை அளவை சமபங்காக பிரித்து ஆண்டில் இருமுறை இட வேண்டும். அதாவது மார்கழி, தை மாதங்களில் ஒரு முறையும், ஆனி, ஆடி மாதங்களில் ஒரு முறையும் இட வேண்டும். மேற்கண்ட உரங்களை இட்ட 30 முதல் 45 நாட்கள் கழித்து தென்னை நுண்சத்து உரத்தை மரம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் இட வேண்டும். முறையாக உரமிடும் பட்சத்தில் குரும்பை உதிர்தல், ஒல்லிக்காய், காய்களில் வெடிப்பு, நீளவடிவிலான வெற்றுகாய்கள் பிரச்னை குறைந்து ஆண்டுக்கு சராசரியாக 150 முதல் 200 தேங்காய் வரை மகசூல் எடுக்க முடியும்.

## மாம்பழ பொருட்கள் தயாரித்தல் பயிற்சி

மதுரை, : மதுரை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தில் மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் 'வணிகமுறையில் மாம்பழ பொருட்கள் தயாரித்தல்' பயிற்சி நடத்தப்படுகிறது. மே 18ம் தேதி துவங்கும் இந்த முகாமில், மாம்பழ பழரசம், மாம்பழ தயார் நிலை பானம், ஜாம், ஆவக்காய் ஊறுகாய் உள்ளிட்ட வணிகமுறை மாம்பழ பொருட்கள் தயாரிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், மனையியல் விரிவாக்கத்துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்-625104, முகவரியிலோ, 0452-2424684 தொலைபேசியிலோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆண்டிபட்டியில் கனமழை

ஆண்டிபட்டி, : ஆண்டிபட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளான அனுப்பபட்டி, சித்தையக்கவுண்டன்பட்டி, ஏத்தக்கோவில், கண்டமனூர்,

ராமலிங்காபுரம், மொட்டனூத்து உள்ளிட்ட பகுதிகளில் நேற்று மாலை கனமழை பெய்தது. இதனால், பகல் முழுவதும் சுட்டெரித்த வெயிலின் உக்கிரம் குறைந்தது. பூமி குளிர்ந்து குளிர்காற்று வீசியது. சுமார் சுமார் 2 மணி நேரம் பெய்த மழையால் ஆண்டிபட்டி நகரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பின்னர் மீண்டும் மாலை 6 மணிக்கு மின்சாரம் வந்தது. இம்மழையால் ஆண்டிபட்டி பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### பரமத்திவேலூரில் வாழைத்தார் விலை உயர்வு



பரமத்திவேலூர் ஏல மார்க்கெட்டில் வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

வாழைத்தார்கள் ஏலம்

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் காவிரி கரையோர பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், பரமத்திவேலூர், அணிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, குப்புச்சிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் வாழை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இங்கு விளையும் வாழைத்தார்கள் பரமத்திவேலூரில் செயல்பட்டு வரும், தினசரி வாழைத்தார் ஏல மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டு, ஏலம் விடப்படுகிறது. இந்த ஏலத்தில் சேலம், நாமக்கல், தாராபுரம், கரூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டு, ஏலம் எடுத்து செல்கின்றனர்.

விலை உயர்வு

இந்த மார்க்கெட்டில் சென்ற வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.150-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.200-க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.200-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.200-க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.2-க்கும் ஏலம் போனது. இந்த நிலையில் இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.250-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.250-க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.250-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.250-க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.3-க்கும் ஏலம் போனது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்த பகுதியில் பலத்த காற்றுடன் கூடிய பெய்த மழையின் காரணமாக ஏராளமான வாழைத்தார்கள் சாய்ந்து விட்டன. மேலும் தொடர்ந்து மழை பெய்யும் வாய்ப்பும் இருந்ததால் விவசாயிகள் அதிக அளவில் வாழைத்தாரை அறுவடை செய்து ஏலத்திற்கு கொண்டு வந்து இருந்தனர். இதனால் மார்க்கெட்டுக்கு வாழைத்தாரின் வரத்து அதிக அளவில் இருந்தது. வரத்து அதிகம் இருந்தபோதிலும் விலையும் உயர்ந்து காணப்பட்டதால் வாழைத்தார் பயிரிட்டிருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## ஆண்டிப்பட்டி பகுதியில் கோவில் திருவிழாக்களால் மரிக்கொழுந்து விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி



கண்டமனூர்

ஆண்டிப்பட்டி பகுதியில் கோவில் திருவிழாவையொட்டி மரிக்கொழுந்து விலை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>மரிக்கொழுந்து சாகுபடி</u>

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் சித்திரை மாதத்தையொட்டி கோவில் திருவிழாக்கள் அதிகம் நடைபெற்று வருகிறது. இந்த விழாவையொட்டி மரிக்கொழுந்து உள்ளிட்ட பூக்களின் தேவை அதிகரித்து உள்ளது. ஆண்டிப்பட்டி ஒன்றியத்தில் உள்ள ராஜதானி, சித்தார்பட்டி, கதிர் அம்மாபட்டி, காமாட்சிபுரம், தெப்பம்பட்டி ஆகிய கிராமங்களில் 100–க்கும் மேற்பட்ட ஏக்கரில் மரிக்கொழுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த மரிக்கொழுந்து 35 முதல் 40 நாட்களுக்குள் அறுவடைக்கு தயாராகிவிடும். மேலும் 30 நாட்கள் இடைவெளிவிட்டு 5 முறை அறுவடை செய்யலாம். விழாவையொட்டி மரிக்கொழுந்து விலை உயர்ந்துள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்பு ஒரு கிலோ

மரிக்கொழுந்து ரூ.15–க்கு விற்றது. தற்போது தேவை அதிகம் இருப்பதால் கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனையாகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>அதிக ஏற்றுமதி</u>

இதுகுறித்து அப்பகுதி விவசாயிகளிடம் கேட்ட போது, ‘மரிக்கொழுந்து விலை உயர்ந்து வருவதால், அதனை அதிக சாகுபடி செய்து வருகிறோம். மேலும் வைகாசி விசாகம், ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மாதங்களில் விசேஷ நாட்கள் தொடர்ந்து இருப்பதால் மரிக்கொழுந்து விலை குறைய வாய்ப்பில்லை. வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இங்கு இருந்து அதிக அளவு ஏற்றுமதி செய்து வருகிறோம். இதனால் மரிக்கொழுந்து சாகுடிபடி செய்வதில் ஆர்வமாக இருக்கிறோம்’ என்றனர்.